# இயேசு கிறிஸ்துவின் சிலுவை

## (இயேசு கிறிஸ்து சிலுவையில் என்ன செய்தார்? எதற்காக செய்தார் ? யாருக்காக செய்தார்?)

**கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு ! இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.**

*ஆதி 22:8 அதற்கு ஆபிரகாம்: என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்றான். அப்புறம் இருவரும் கூடிப்போய்,*

கிறிஸ்து பிறப்பதற்கும் சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு, மோரியா மலையின் மேல் வைத்து, விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம், இயேசுவின் ஒரு நிழலான ஈசாக்கிடம் சொன்ன ஒரு தீர்க்கதரிசன வசனம் இது. "தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்".

"*God will provide **himself a lamb for a burnt offering**:* ".....

உண்மையில் தேவன் தமக்கு தகன பலிக்கான ஆட்டுக்குட்டியை உலகத்துவக்க முதலே பார்த்துக்கொண்டார் *( வெளி 12:8 ).*

இந்த ஆட்டுக்குட்டியைத்தான் " தகன பலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே " என்று ஈசாக்கு *ஆதி 22:7* ல் கேட்டார்.....

இந்த ஆட்டுக்குட்டியைத்தான் "இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று யோவான், *யோவான் 1:29* ல் பதில் சொல்லுகிறார்.

இந்த ஆட்டுக்குட்டியைப் புகழ்ந்துதான் "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்" என்று *வெளி 5:12* ல் ஆயிரமாயிரம் தூதர்கள் பரலோகத்தில் பாடுகிறார்கள்

தேவன் தனக்கு என தெரிந்து கொண்ட தகனபலியாய், சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாய், கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து ஒரு நாள் மரித்தார். சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு "ஒரு குறிப்பிட்ட நாளில் நடந்த" இந்த நிகழ்ச்சி இன்றும் பல விதங்களில், பல முறைகளில் நினைவு கூரப்படுகிறது. துக்க வெள்ளிக்கிழமை, குருத்தோலை ஞாயிறு, சாம்பல் வியாழக்கிழமை, லெந்து நாட்கள் என்று பலவிதமான நாட்கள் இயேசுவின் மரணத்தோடு சம்பந்தப்படுத்தி அனுசரிக்கப்படுகின்றன. என்றாலும், வேதாகமத்தில் இப்படிப்பட்ட நாட்களின் அனுசரணைகளை குறித்து எந்த இடத்திலும், எந்த விதத்திலும் சொல்லப்படவில்லை. என்றாலும், பலரும் இந்த நாட்களிலாவது இயேசு கிறிஸ்துவின் பாடு மரணங்களை நினைவு கூருவதற்காக, இக்காரியங்கள் உதவியாக இருக்கின்றன என்பது சற்று ஆறுதலான உண்மையே.

இயேசுவின் சிலுவை மரணத்தை நினைவு கூரும் விதத்தில், தியானிக்கும் விதத்தில் பாரம்பரியமாக பல காரியங்கள் செய்யப்படுகின்றன். அவைகள் அனைத்தும் நல்ல காரியங்களே.

**இயேசு கிறிஸ்து சிலுவையில் பேசின 7 வார்த்தைகளை தியானிப்பது நல்லது. இயேசு கிறிஸ்துவின் பாடுகளை நினைத்து கண்ணீர் விடுவது நல்லது. இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கி மரித்த நாளுக்கு முன் 7 நாட்கள், 21 நாட்கள், 40 நாட்கள் உபவாசம் இருப்பது நல்லது. இயேசு கிறிஸ்து மரித்த நாட்களுக்கு முன்பாக மாமிச உணவு சாப்பிடாமல் இருப்பது நல்லது. இயேசு கிறிஸ்து அனுபவித்த உபத்திரவங்களை நினைத்து நினைத்து வருத்தப்படுவது நல்லது. இயேசு மரித்த நாளில் உபவாசம் இருப்பது நல்லது. இயேசு மரித்த நாளில் திட உணவு சாப்பிடாமல் கஞ்சி குடிப்பது நல்லது. இயேசுவின் சிலுவை மரணத்தை நினைத்து அலங்காரங்கள் செய்யாமல் இருப்பது நல்லது.................**

**இவற்றோடு கூட இன்னும் ஒரு படி மேலாக போய், இவைகளை எல்லாம் நாம் செய்வதால், இயேசு கிறிஸ்துவுக்கும் தேவனுடைய ராஜ்யத்துக்கும் என்ன பயன் என்று நம்மைத்தாமே கேட்டுக்கொள்வது மிகவும் நல்லது அல்லவா?..........**

“**லெந்து நாட்கள்**” என்ற தலைப்பில் பலவிதமான உபவாசங்கள், பல சடங்காச்சாரங்கள் சபைகளில் கடைபிடிக்கப்படுகின்றன. எனக்கு தெரிந்த வரையில், இயேசு கிறிஸ்து இப்படிப்பட்ட ஒரு காரியத்தை குறித்து ஒன்றும் சொல்லவில்லை. அப்போஸ்தலர்களோ, ஆதி திருச்சபை தலைவர்களோ இக்காரியத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. வேதாகம திருச்சபையில் இப்படிப்பட்ட ஒரு வழக்கம் இருந்ததாக எந்த சாட்சியமும் இல்லை. அப்படி என்றால் இதை வழக்கத்தில் கொண்டு வந்தது யார்? அவர் எப்படிப்பட்டவர்? ஏன் இதை கொண்டு வந்தார்? நோக்கம் என்ன? என்பதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து விடை கண்டு அதன்பின் “லெந்து நாட்கள்” என்பதை கடைபிடிக்க வேண்டுமா, கூடாதா? என்று முடிவெடுத்து அதன்படி செய்வது நல்லது அல்லவா?.

இயேசு கிறிஸ்து சிலுவையில் பேசிய 7 வார்த்தைகளை பலரும் பேசுவதும், தியானிப்பதும் வழக்கம். அது நல்லது. எந்த வேத வசனங்களையும் தியானிப்பது நல்லதுதான். ஆனால், இயேசு கிறிஸ்து “**சிலுவையில் பேசியதை**” வழக்கமாக தியானிக்கும் மக்கள், இயேசு கிறிஸ்து “**சிலுவையில் செய்ததை**” தியானிக்காமல் இருப்பது ஏன்?. இயேசு கிறிஸ்து “சிலுவையில் என்ன என்ன பேசினார்” என்பதை பல வருடங்களாக தியானித்துக் கொண்டிருக்கும் கிறிஸ்தவர்கள், அதோடு கூட “ இயேசு கிறிஸ்து சிலுவையில் என்ன என்ன செய்தார் ?” என்று ஏன் தியானிப்பது இல்லை?. இயேசு கிறிஸ்து சிலுவையில் வைத்து “பேசியதுதான் முக்கியமா?”....... இயேசு கிறிஸ்து சிலுவையில் வைத்து செய்தது முக்கியம் இல்லையா ?. இயேசு கிறிஸ்து சிலுவையில் வைத்து பேசிய வார்த்தைகள் அனைத்தும் ஏறத்தாழ எல்லா விசுவாசிகளுக்கும் தெரியும், ஆனால் இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்த காரியங்கள் எத்தனை விசுவாசிகளுக்கு தெரியும் ?.

ஒரு குடும்பத்தை எடுத்துக்கொள்வோம். கணவன், மனைவி, மூன்று பிள்ளைகள். ஏழ்மையான குடும்பம். வறுமையால் வாடும் தன் குடும்பத்தை மீட்க கணவன் வெளிநாட்டுக்கு வேலைக்கு செல்கிறான். கடும் வெயிலில், குளிரில், மணல் காற்றில், சரீர உழைப்பு, மன உழைப்பு என்று கடினமாக வேலை செய்கிறான். தன் குடும்பத்தை பார்த்துக்கொள்ளும்படி மனைவிக்கு பணம் சம்பாதித்து அனுப்பிக்கொண்டிருக்கிறான். இரண்டு வருடங்கள் கழித்து வீட்டுக்கு வருகிறான். வீட்டின் நிலமையை பார்த்து திகைத்துப்போகிறான். கந்தை துணியில், உருக்குலைந்த நிலையில் மனைவி. ஒரு வளர்ச்சியும் இல்லாமல் அலங்கோலமாக பிள்ளைகள். இடிந்து உருக்குலைந்து அழுக்காக கிடக்கும் வீடு. இதை எல்லாம் பார்த்து அலறிப்போய் மனைவியிடம் கேட்கிறான், “ஐயோ! ஏன் இந்த நிலமை ? நான் உனக்கு மாதாமாதம் பணம் அனுப்பினேனே, பொருட்கள் அனுப்பினேனே, ஏன் நீ ஒன்றுமே செய்ய வில்லை என்று கேட்கிறான். அதற்கு மனைவி இப்படி பதில் கூறுகிறாள், “ நீங்கள் எங்களுக்காக பாடு பட்டீர்கள், துன்பம் சகித்தீர்கள், நிந்தை போறுத்தீர்கள், கஷ்டப்பட்டீர்கள். நீங்கள் இங்கிருந்து போன நாளில் இருந்து இத்தனை நாட்களும் நீங்கள் படும் துன்பத்தை “நினைத்து, நினைத்து, தியானித்து, தியானித்து, சாப்பிடாமல், கண்ணீர் விட்டு அழுது கொண்டே இருந்தோம்”........ இதற்கு அந்த கணவன் எப்படி பதில் சொல்லி இருப்பான்... “ அடி, முட்டாளே! பாவியே! அக்கிரமக்காரியே! ஏன் இப்படி செய்தாய். உண்மையில் நான் பட்ட துன்பங்களுக்காக நீ வேதனைப்பட்டிருந்தால், நான் அனுப்பின பணத்தை சரியான முறையில் உபயோகித்து, என் வீட்டை பராமரித்து, என் பிள்ளைகளை பராமரித்து, என் குடும்பத்தை பராமரித்து, உன்னையும் கவனித்து, வருங்காலத்துக்கு சேமித்து அல்லவா வைத்திருக்க வேண்டும். அதை விட்டு வெறும் மாய்மாலம் காண்பித்து, நான் உங்களுக்காக பட்ட பாடுகள், துன்பங்கள், வேதனைகள், உபத்திரவங்கள் அனைத்தையும் வீணாக்கி விட்டாயே? இதையா நான் உன்னிடம் இருந்து எதிர்பார்த்தேன் ?...... என்று அல்லவா வருத்தப்பட்டிருப்பான்?....

**இந்த வேத பாடத்தில் - இயேசுகிறிஸ்து ஏன் சிலுவையில் மரித்தார் ? இயேசு கிறிஸ்து சிலுவையில் என்ன என்ன காரியங்களை செய்தார் ? இயேசு கிறிஸ்து சிலுவையில் பல காரியங்களை எதற்காக செய்தார் ? இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் நம்முடைய பங்கு என்ன ? இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் நமக்கு கிடைத்தது என்ன என்ன ? இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் நிமித்தமாக நாம் இப்போது என்ன செய்ய வேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார் ? - போன்ற சில காரியங்களை இப்போது பார்ப்போம்.**

**சிலுவை:** வேறு எந்த வார்த்தையும் இதன் அளவுக்கு அகிலம் முழுவதும் அறியப்பட்டது இல்லை. உலக சரித்திரத்தில் ஒரு புது சகாப்தத்தை உருவாக்கிய வார்த்தை. இயேசு கிறிஸ்துவின் மரணத்துக்குபின் உலகத்தில் செல்வாக்கு படைத்த வார்த்தை. கிறிஸ்தவத்க்கும், உபத்திரவங்களுக்கும், பொறுமைக்கும் ஒரு அடையாள சின்னம்.

இதன் கிரேக்க வார்த்தை" **ஸ்டாவ்ராஸ்.**"லத்தீன் வார்த்தை " **க்ரக்ஸ் – ஸிம்ப்ளக்ஸ் .**"இவ்வார்த்தை பொதுவாக ஒரு "நேரான மரத்தடி – கழுமரம்" என்பதை குறிக்கிறது . பிற்காலத்தில் பல வடிவிலான சிலுவைகள் அறிமுகப்படுத்தப்பட்டன . அவை..

1. **க்ரக்ஸ் கமிஸா ( T )** இது பண்டைய சால்டிய நாட்டில் உருவாக்கப்பட்டது ,அவர்களது தெய்வமான தம்முஸ் – ன் சின்னமாக ) அதன் பெயரின் முதல் வார்த்தை ( உபயோகிக்கப்பட்டது .புனித அந்தோணியாரின் சிலுவை என்றும் அழைக்கப்படுகிறது.

2. **க்ரக்ஸ் இம்மிஸா ( † )** இது நாம் இப்போது வழக்கமாக படங்களில் காண்பது . லத்தீன் சிலுவை என்று பொதுவாக அழைக்கப்படுகிறது.

3. **கிரேக்க சிலுவை ( + )**

4. **க்ரக்ஸ் டிகசடே ( X ) (** இது புனித அந்திரேயாவின் சிலுவை என்றும் அழைக்கப்படுகிறது.

புதிய ஏற்பாட்டில் **ஸ்டாவ்ராஸ்** என்ற வார்த்தை – *மத்தேயு 27:32* போன்ற இடங்களில் சிலுவை அல்லது கழு மரத்தை குறிக்கிறது . 2 *கொரி 18-1:17* போன்ற இடங்களில்" சிலுவைப்பாடுகள் "என்பதை குறிக்கிறது. *கலா 5:11* போன்ற இடங்களில்" உலகத்தை விட்டு வாழ்வதை "குறிப்பிடுகிறது .*கலா 3:18 ;2:16 ;6:12,14* போன்ற இடங் களில் உலத்தை இன்பங்களில் மூழ்காமல் உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கையை குறிப்பிடுகிறது . *மத்தேயு 10:38* போன்ற இடங்களில்" இயேசுவோடு இணைந்திருப்பதனால் வரும் உபத்திரவங்களை " குறிப்பிடுகிறது.

## இயேசு கிறிஸ்து ஏன் " சிலுவையில்" மரித்தார் ?

### 1. வேத வாக்கியங்கள் நிறைவேறும்படியாக.

***கலா 3:13*** *மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.*
இங்கே " **மரம்** " என்பதற்கான கிரேக்க வார்த்தை" ஸூலன் "என்பதாகும். இது ஒரு மரத்தடி ,மரம் ,தடி ,கொம்பு போன்றவற்றை குறிப்பிடுகிறது.

இயேசு கிறிஸ்து உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக இருக்கிறார் . தேவனுடைய மீட்பின் திட்டங்கள் அனைத்தும் முறையாக நிறைவேற்றப்பட வேண்டுமானால் , இயேசு கிறிஸ்து தன் அனைத்து செயல்களையும் தேவனுடைய சித்தத்தின்படி மாத்திரம் செய்ய வேண்டியது அவசியம் .தேவன் வேதாகமத்தின் பல இடங்களிலும் தனது தீர்க்கதரிசிகள் மூலமாக தனது மீட்பின் திட்டங்களை கூறியிருக்கிறார் . ஆகவே இயேசு கிறிஸ்து தன்னால் இயன்ற அளவுக்கு ,எல்லா இடங்களிலும் தீர்க்க தரிசிகள் முன்னறிவித்த படியே காரியங்களை செய்திருக்கிறார், சம்பவங்கள் நடைபெற அனுமதித்திருக்கிறார் .
***லூக்கா 18:31*** *பின்பு அவர் பன்னிருவரையும் தம்மிடத்தில் அழைத்து: இதோ, எருசலேமுக்குப் போகிறோம், மனுஷகுமாரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவைகளெல்லாம் நிறைவேறும்.*
***மத் 26:54*** *அப்படிச் செய்வேனானால், இவ்விதமாய்ச் சம்பவிக்கவேண்டும் என்கிற வேதவாக்கியங்கள் எப்படி நிறைவேறும் என்றார்.*
***மத் 26:56*** *ஆகிலும் தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறைவேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக்கிறது என்றார். அப்பொழுது, சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்.*

இயேசு கிறிஸ்து தன் சிறு வயதில் இருந்தே, வேத பண்டிதர்களோடு விவாதம் செய்யும் அளவுக்கு, வேத வசனங்களை நன்கு கற்று அறிந்திருந்தார். ஆகவே அந்த வேத வசனங்களின்படி தன் வாழ்க்கையில், தன்

மரண வேளையில் அனைத்து காரியங்களையும், தேவனுடைய சித்தப்படியும், தேவன் தனக்கு என்று முன் குறித்திருந்த படியும் மாத்திரமே செய்தார் *(யோவான் 5:30; 8:29).*

இயேசுவின் மரணத்தை குறித்தான கீழ்க்காணும் சம்பவங்கள் அனைத்தும் தீர்க்கதரிசிகளால் முன் குறிக்கப் பட்டிருந்தன. யூதர்களால் கைவிடப்படுதல் *( ஏசாயா 53:3; யோவான் 1:11 ),* எருசலேம் பிரவேசம் *( சகரியா 9:9; யோவா 12:13-15 ),* ஒரு நண்பனால காட்டிக்கொடுக்கப்படுதல் *( சங் 41:9; மாற்கு 14:10),* 30 வெள்ளிக்காசுகளுக்கு விற்கப்படுதல் *( சக 11:12; மத் 16:15 ),* கள்ள சாட்சிகளால் குற்றம் சாட்டப்படுதல் *( சங் 27:12; மத் 26: 60-61 ),* குற்றம் சாட்டப்பட்டபோது பேசாமல் இருந்தது *( ஏசாயா 53:7; மத் 24:62-63 ),* அடிக்கப்படுதல், காறித்துப்பப்படுதல் *( ஏசாயா 50:6; மாற்கு 14:65 ),* ஒரு காரணமும் இன்றி வெறுக்கப்படுதல் *( சங் 69:4; யோவா 15:23-25 ),* நமது நோய்களுக்காகவும் பாவங்களுக்காகவும் உபத்திரவப்படுதல் *( ஏசாயா 53:4-5; மத் 8:16-17 ),* பாவிகளோடு கூட சிலுவையில் அறையப்படுதல் *( ஏசாயா 53:12: மத் 27:38 ),* இயேசுவின் வஸ்திரங்களை பங்கிடுவதற்காக சீட்டுப்போடுதல் *( சங் 22:18: யோவா 19:24 ),* கசப்பான காடு குடிக்க கொடுக்கப்படுதல் *( சங் 69:21: யோவா 19:28-30 ).* விலாவில் குத்தப்படுதல் *( சக 12:10; யோவா 19:34 ),* ஐசுவரியவான்களோடு அடக்கப்படுதல் *( எசாயா 53:9; மத் 27:57-60 ),* உயிர்த்தெழுதல் *( சங் 16:10; லூக்கா 24:38-40 ),* பரலோகத்துக்கு ஏறி செல்லுதல் *( சங் 68:18; லூக்கா 24:50-51 ).*

### இயேசு கிறிஸ்து எதற்காக வேத வசனங்களின்படி சிலுவையில் மரித்தார் ?

***1பேதுரு2:21*** *இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.*

ஒரு விசுவாசியின் வாழ்வின் பிரதான மாதிரி " இயேசு கிறிஸ்து )" *மத் 10:24-25.* இயேசு கிறிஸ்து, தன் வாழ்க்கையில் செய்த அனைத்தையும், நமக்கு ஒரு முன்மாதிரியாகவே செய்தார் *( எபி 12:2 ).* இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தது, வேத வாக்கியங்கள் அனைத்தும் தன் வாழ்க்கையில் நிறைவேறும் படியாக. இயேசுவின் அடிச்சுவடுகளை தொடர்ந்து வரும்படி அழைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு விசுவாசியும் இயேசுவின் மாதிரியை பின்பற்ற வேண்டியது அவசியமாகும். இங்கே, தன் வாழ்வில் எவ்வாறு வேத வாக்கியங்கள் அனைத்தும் நிறைவேற இயேசு அனுமதித்தாரோ அதுபோலவே ஒவ்வொரு விசுவாசியும் தன் வாழ்க்கையில் தன்னைப்பற்றி தேவன் குறிப்பிட்டிருக்கிற அனைத்து வசனங்களும் நிறைவேற அனுமதித்து வாழ வேண்டும். அப்போதுதான் நம்மைப்பற்றி தேவன் வைத்திருக்கும் திட்டங்களை பூரணமாக தேவனால் நம் வாழ்க்கையில் நிறைவேற்ற முடியும். இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தது - நமக்கு ஒரு மாதிரியை வைத்துப்போவதற்காக.

## 2. நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்கும்படியாக.

இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்ததற்கான மற்றோரு பிரதான காரணம் " நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொள்ளும்படியாக"
***கலா 3:13*** மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.
***உபா 21:23*** *இரவிலே அவன் பிரேதம் மரத்திலே தொங்கலாகாது; அந்நாளில்தானே அதை அடக்கம்பண்ணவேண்டும், தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன், ஆகையால் உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் உன் தேசத்தைத் தீட்டுப்படுத்தாயாக.*

### நியாயப்பிரமாணத்தின் சாபம்

தேவன் நியாயப்பிரமாணத்தை கொடுத்தபோது, அதை முழுமையாக எப்போதும் கடைபிடிப்பவர்களுக்கு ஆசீர் வாதத்தையும், அதை முழுமையாக எப்போதும் கடைபிடிக்காதவர்களுக்கு சாபத்தையும் கட்டளை யிட்டிருந்தார். *( உபா 28 ).* ஆனால் யாரும் முழுமையாக நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்படிந்தது இல்லை *( யோவா 7:19; அப் 7:53; 13:39; கலா 3:11; 6:13; ரோமர் 9:31 ).* ஆகவே எல்லோரும் பாவிகள் *( ரோமர் 3:10,23 ).* எல்லோரும் பாவத்துக்கு அடிமைகள் *( கலா 3:22 );* இதனால் எல்லோரும் நியாயப்பிரமாணத்தின் சாபத்துக்கு உட்பட்டவர்களாயினர். *( உபா 27:26; கலா 3:10 ).*

### நியாயப்பிரமாணத்தின் சாபத்தில் இருந்து மீட்பு

**மீட்பு:** புதிய ஏற்பாட்டில் " ,மீட்பு "என்ற வார்த்தைக்காக **3** முக்கிய கிரேக்க வார்த்தைகள்

உபயோகப்படுத்தப்பட்டுள்ளன .இவ்வார்த்தைகளின் அர்த்தங்களை பார்ப்போமானால் அதில் இருந்து மீட்பு என்பதன் அர்த்தத்தை நன்றாக மனதிலாக்கிக்கொள்ளலாம் .

1. **அகராசோ** – அடிமைச்சந்தையில் வாங்குவது . நாம் அனைவரும் நியாயப்பிரமாணத்தின் அடிமைகளாக இருந்தோம் *( ரோம ;7:1,3,6 ;6:14 ;3:19 ;2:12 கலா 3:23 )*

2. **எக்ஸ் அகராசோ** – அடிமைச்சந்தையில் இருந்து வாங்கி வெளியே கொண்டு போவது ) .நியாயப்பிரமாணம் என்னும் சக்தியின் அடிமைத்தனத்தில் இருந்து நாம் முற்றிலும் வெளியே வருவது. இவ்வார்த்தைதான் *கலா 3:13*ல் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

3. **லுட்ரூ** – மீட்புப்பணம் கொடுத்து விடுவிப்பது.

மனுக்குலம் முழுவதும் நியாயப்பிரமாணத்தின் சாபத்தின் கீழ் இருந்தது .ஆகவே அனைவரும் இந்த நியாயப் பிரமாணத்தின் சாபமாகிய தண்டனையை பெற்றே ஆக வேண்டும் .இந்த தண்டனை மரணம் .ஆனால் இயேசு இந்த சாபத்தை தன் மேல் ஏற்று அதன் தண்டனையாகிய மரணத்தை ஏற்றுக்கொண்டார் .நாம் மீறின நியாயப் பிரமாணத்தின் தண்டனையாகிய மரணத்தை முழுவதுமாக அடைத்து தீர்த்தார் . இதன் மூலமாக நம்மை நியாயப்பிரமாணத்தின் சாபத்தில் இருந்து மீட்டுக்கொண்டார். ( நம்மை நியாயப்பிரமாணத்தின் அடிமைச் சந்தையில் இருந்து வாங்கி வெளியே கொண்டு வந்தார்.

## இயேசு எதற்காக நியாயப்பிரமாணத்தின் சாபத்தில் இருந்து நம்மை மீட்கும்படியாக சிலுவையில் மரித்தார்?

### I. ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் நமக்கு வரும்படியாக

*கலா 3:14 ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று.*

ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் *கலா 3: 6* ல் சொல்லப்பட்டிருக்கும் "*அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது*". ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த ஆசீர்வாதம் "கிரியைகள் இல்லாமல் தேவனை விசுவாசித்ததால் கொடுக்கப்பட்ட நீதி". ஆசீர்வாதமும் சாபமும் ஓரே இடத்தில் இருக்க முடியாது. இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் சாபத்தை நமது பிரதிநிதியாக எடுத்துக்கொண்டார். ஆகவே இப்போது யாரும் இயேசுவின் மேல் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக, கிரியைகள் இல்லாமல் "நீதிகரணத்தை" பெற்றுக்கொள்ள முடியும். தேவனுடைய நீதியை பெற்று அவருக்கு முன்பாக நீதிமானாக நிற்க முடியும். இயேசு கிறிஸ்து சிலுவை மரணத்தின் மூலம் நியாயப்பிரமாணத்தின் சாபத்தில் இருந்து நம்மை மீட்டுக்கொண்டதால் நாம் இப்போது "விசுவாசத்தால் நீதிகரணம்" என்ற மாபெரும் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள முடியும். உலகத்தில் மற்ற எந்த ஒரு மதத்திலும் இல்லாத ஒரு மாபெரும் ஆசீர்வாதம் இது. ஏதாவது ஒரு கிரியை செய்தோ அல்லது செய்யாமல் இருப்பதாலோ நாம் நீதிமான்கள் ஆக்கப்படுவது இல்லை; மாறாக இயேசுகிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தில் மூலமாக "மாத்திரமே" நாம் நீதிமான்கள் ஆக்கப்படுகிறோம்.

### II. ஆவியைக்குறித்து சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே *பெறும்படியா ( கலா 3:14 ).*

*ரோமர் 6:14 நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது.*

இப்போது நாம் நியாயப்பிரமாணத்தின் சாபத்துக்கு உட்பட்டவர்கள் அல்ல. நியாயப்பிரமாணம் நாம் மரிக்கும்படியாக நம்மை குற்றப்படுத்த முடியாது . ஏனெனில் நாம் ஏற்கனவே இயேசுவுடன் மரித்து விட்டோம் *( ரோமர் 8:1 ).* இப்போது நாம் நியாயப்பிரமாணத்தின் சாபத்தில் இருந்து மீட்கப்பட்டவர்களாகவும் வாங்கப்பட்டவர்களாகவும், இயேசு கிறிஸ்துவோடு கூட இணைக்கப் பட்டவர்களாகவும் இருக்கிறோம் .

### III. பரலோகத்துக்கும் பூமிக்கும் இடையே சிலுவையில் தொங்குவதற்காக

இயேசு கிறிஸ்து ,பரலோகத்தில் இருந்து தேவனாலும் ,பூமியில் இருந்து மனிதராலும் கைவிடப்பட்டார் என்பதை, இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கியது காட்டுகிறது .

**மனிதரால் கைவிடப்பட்ட இயேசு கிறிஸ்து;** இயேசுவின் சீடர்கள் அவரை கைவிட்டு ஓடினார்கள் . *மாற்கு 14:50 அப்பொழுது எல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்.*

**அவரது சொந்த ஜனம் அவரை கைவிட்டது.** *மாற்கு 15:13 அவனைச் சிலுவையில் அறையும் என்று மறுபடியும் சத்தமிட்டுச் சொன்னார்கள்.*

**இயேசு ,தேவனால் கைவிடப்பட்டார்.** *மத் 27:46 ஒன்பதாம்மணி நேரத்தில் இயேசு: ஏலி! ஏலி! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்; அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.*

### IV. மனுக்குலத்துக்கு மேலாக இருந்து தேவனுடைய சாபத்தை நேரடியாக வாங்குவதற்காக

*கலா 3:13 மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.*
இவ்வசனத்தின்“ **நமக்-காக** ”என்ற வார்த்தைக்கான கிரேக்க வார்த்தை“ ஹுப்பர் ”என்பதாகும் . இவ்வார்த் தையை சேர்த்து பார்க்கும்போது“ ***நமக்காக சாபமாகி,*** ”என்ற தமிழ் வார்த்தையின் அர்த்தத்தை , “**நமக்கு மேலாக சாபமாகி** ”என்று எடுத்துக்கொள்ள வேண்டும் .இயேசு நமக்கு பதிலாக மரித்தார் .இதற்காக நமக்கும் நியாயப் பிரமாணத்தின் சாபத்துக்கும் இடையில் அவர் வந்தார் .நியாயப்பிரமாணத்தின் சாபம் தேவனிடம் இருந்து வருவது .நாம் தேவனுடைய சாபத்தின் கீழ் இருந்தோம் .ஆனால் இயேசு நமக்கு“ **மேலாக** ” வந்து தேவனுடைய சாபத்தை தான் ஏற்றுக்கொண்டார் .அதற்காக ,மனுக்குலத்துக்கு மேலாக ,பரலோகத்துக்கு கீழாக சிலுவையில் தொங்கினார்.

# இயேசு சிலுவையில் நிறைவேற்றியவைகள்

## 1. சிலுவையினால் ஒப்புரவு

*எபே 2:16 பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.*
*கொலோ 1:20 அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி,*
*பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு*
*ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.*
*2 கொரி 5:18 இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.*

ஆதாமின் கீழ்ப்படியாமையினால், பாவம் உலகத்தில் நுழைந்தது *( ரோமர் 5:12 ).* ஆதாமின் சந்ததியானதால், அனைத்து மனிதர்களும் ஆதாமிடம் இருந்து பாவ சுபாவத்தை பெற்றுக்கொண்டு பாவிகள் ஆக்கப்பட்டார்கள் *( ரோமர் 5:18-19 ).* இதனால் எல்லா மனிதர்களும், பாவத்தின் சம்பளமாகிய நித்திய மரணத்தை பெற்றுக்கொள்ள வேண்டியவர்களானார்கள் *( ரோமர் 6:23 ).* இதனால் மனுக்குலம் சாத்தானின் அடிமைகள் ஆனது *( ரோமர் 6:16 ).* மனிதன் பாவத்தில் விழுந்த பிறகு, பாவத்தால் வந்த ஒரு முதல் விளைவு “மனிதன் தேவனுடைய பிரசன்னத்தில் இருந்து ஒளிந்து கொண்டது *“ ( ஆதி 3:8 ).* இதுதான் பாவத்தின் விளைவு. தேவனிடம் இருந்து நித்தியமாக பிரிவு. மனிதனுடைய ஆவி தேவனுடைய ஆவியில் இருந்து நித்தியமாக பிரிக்கப்பட்டது. அது மரித்த ஆவியானது.

ஆனாலும், தேவன் மனிதனை அவ்வண்ணமே விடாமல் மனிதனை தேடி வந்தார் *( ஆதி 3:9 ).*

தேவன் தன்னுடைய கோபத்தில் மனிதனை ஏதேன் தோட்டத்தில் இருந்து துரத்தவில்லை; மாறாக அவர்கள் பாவத்தில் விழுந்த நிலையில், ஜீவ விருட்சத்தை புசித்து நித்தியமாக துன்பத்தில் வாழக்கூடாது என்ற நல்லெண்ணத்தில். *( ஆதி 3:22 ).*

ஆனாலும் கூட தேவன் அவர்களது பாவத்தை கணக்கிட்டு அதற்கு தக்கவாறு அவர்களை தண்டிக்கவில்லை *( ரோமர் 5:13 ).*

ஆனால் மனிதன் இதை தவறாக புரிந்து கொண்டான். தேவன் தண்டிக்கவில்லை என்பதால், நாம் பாவம் செய்தால் பரவாயில்லை என்று பாவம் தொடர்ந்து செய்ய ஆரம்பித்தான் *( ஆதி 4:23 ).* இதை சாத்தான் தனக்கு சாதகமாக்கிக்கொண்டு, மனுக்குலத்தை தனக்கு அடிமைகளாக்கி அவர்களது வாழ்க்கையில் பேரழிவுகளை கொடுத்துக்கொண்டிருந்தான் *( ரோமர் 6:16; யோவா 10:10 ).* இதனால் பாவத்தை கட்டுப்படுத்துவதற்காக, பாவத்தை அறிந்து கொள்வதற்காக தேவன் நியாயப்பிரமாணத்தை கொடுத்தார்.

*ரோமர் 3:20 இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை*

*ரோமர் 7:7 ஆகையால் என்ன சொல்லுவோம்? நியாயப்பிரமாணம் பாவமோ? அல்லவே. பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை; இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே.*

மனிதன் பாவத்தின் விளைவுகளை உணர்ந்து, சுயநீதிகரணம், மற்றவர்களோடு ஒப்பிட்டுப்பார்த்தல் போன்ற காரியங்களை விட்டு இயேசுவை நோக்கிப்பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் தேவன் நியாயப்பிரமாணத்தை கொடுத்தார். நியாயப்பிரமாணம் ஒழுங்காக கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதற்காக அதனோடு தண்டனைகளையும் கொடுத்தார். ஆனால் இந்த தண்டனைகளால், மனிதன் தேவனை "அன்பில்லாதவர்' என்று தவறாக புரிந்து கொண்டான்.

தேவன் பாவியை சிநேகிக்கிறார், ஆனால் பாவத்தை வெறுக்கிறார். ஆனால் பாவம் மனுக்குலத்தை அழித்துக்கொண்டிருந்தது. தேவன் சிநேகிக்கிற, தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட, தேவனுடைய பிள்ளைகளான மனுக்குலத்தை பாவம் அழித்துக்கொண்டிருந்தது. இதை தேவன் அனுமதிக்க முடியாது. ஆகவே தேவன் பாவத்தை அழிக்க ஏதாவது செய்தாக வேண்டும். அதனால் தேவன் பாவத்தின் மேல் போர் தொடுத்தார். இந்த போர் " பாவத்தின் மேல் தேவன் தொடுத்த போர்"

இந்த போரின் கடைசி யுத்தம் *ஏசாயா 53: 4-6* ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

*4. மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.*
*5. நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.*
*6. நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.*

*1 யோவான் 2:2 நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.*

இந்த போரின் கடைசி யுத்தமாக, தேவன் உலகத்தின் சகல பாவங்களையும் இயேசுவின் மேல் சுமத்தி, இயேசு கிறிஸ்து அவற்றுக்கு இரட்டத்தனையாக தண்டனை பெற்றார் *( ஏசாயா 40:2).* அவர் மொத்த மனுக்குலத்தின் பாவங்களுக்குமான தண்டனையாகிய சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்டார்.

ஒப்புரவு என்றால் **" மீண்டும் சுமூக உறவு ஏற்படுத்தப்படுதல்"** என்று அர்த்தம்.

இப்போது பாவங்களுக்கான முழு தண்டனையும் பெறப்பட்டதால், மனிதன் தேவனோடு மீண்டும் ஒரு சுமூகமான உறவு நிலைக்குள் வர முடியும். மனிதனை தேவனிடம் இருந்து பிரித்து வைத்திருந்த பாவம் என்னும் பிரச்சினை தீர்க்கப்பட்டாகிவிட்டது *( ஏசாயா 59:2 ).* மனுக்குலத்தின் மொத்த பாங்களுக்குமான தண்டனை சிலுவையில் இயேசுவுக்கு கொடுக்கப்பட்டாகிவிட்டது. மனிதன் இப்போது மன்னிக்கப்பட்டவனாக மீண்டும் தேவனோடு ஒரு நல்ல சுமூக உறவு நிலைக்குள் வர முடியும். தேவனுக்கும் மனிதனுக்கும் இருந்த பகைமை ஒழிக்கப்பட்டுவிட்டது. மனிதன் இப்போது தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டாகி விட்டது.

இந்த ஒப்புரவு தேவனும் மனிதனும் செய்தது அல்ல. இது தேவன் செய்தது. தேவன், இயேசு கிறிஸ்து மூலமாக நம்மை அவரோடு ஒப்புரவாக்கினார் *( 2 கொரி 5:18-21; கொலோ 1:20 ).* இது இரண்டு பாகங்கள் கொண்டது. முதலாவதாக பரிசுத்த தேவன் மனிதனோடு ஒப்புரவாகினார், ஏனென்றால் இயேசு கிறிஸ்து பாவங்களுக்கான தண்டனையை சிலுவையில் ஏற்றுக்கொண்டார். இரண்டாவதாக மனிதன் தேவனோடு ஒப்புரவாகிறான்,

ஏனென்றால் அவனது அடிப்படை மனப்பாங்கான பகைமை மாறி இப்போது ஒரு நட்பு மனப்பாங்கோடு அவன் தேவனிடம் ஒப்புரவாகிறான் *( எபே 2:12-16 ).*

## 2.சிலுவையில் நம் பழைய மனிதன் அறையப்படுதல்

*ரோமர் 6 :6 நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக,*
*நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.*
*7 மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.*

இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவைக்கு போனபோது, அவர் தனியாக செல்லவில்லை. அவர் மொத்த மனுக்குலத்தையும் தன்னுள் அடக்கிக்கொண்டவராக சென்றார். இயேசு கிறிஸ்து அனைத்தையும் தன்னுள்ளே கொண்டவர். அவரே சகலத்தின் தொடக்கம். அவருக்காக, அவரால், அவர் மூலமாகவே அனைத்தும் இருக்கிறது.

*கொலோ 1: 15 அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.*
*16 ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ள வை களுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்க ளானாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.*
*17 அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.*

*ரோமர் 5:19 அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.*
மொத்த மனுக்குலமும் ஆதாமின் கீழ்ப்படியாமையினால் பாவிகள் ஆக்கப்பட்டார்கள். அடிப்படை பிரச்சினை "**பாவி**". அவனை சரியான விதத்தில் கையாள வேண்டும். பாவத்தால், ஆதாமிடத்தில் ஒரு அடிப்படை மாற்றம் சம்பவித்தது. அது என்னவென்றால், அவன் சுபாவத்தால் தேவனுக்கு பிரியமானவனாக இருக்க முடியாது.

பாவம்: ஒரு சக்தி. கோட்பாடு. கிரியைகளை ஊக்குவிக்கும் காரணி. ஒரு மனிதனை பாவச்செயல்களை செய்யத்தூண்டும் சக்தி.

பாவத்தின் தலைவன் சாத்தான் *( யோவான் 8:44; ரோமர் 5:12, 14; 6:16: எபி 2:14)*. பாவத்தை உபயோகித்து, சாத்தான் மனிதனை பாவச்செயல்களை செய்ய செய்கிறான். இந்த செயலை தடுக்க வேண்டுமென்றால் அதற்கு ஒரே வழிதான் இருக்கிறது. பாவத்துக்கு அடிமைத்தனம் பிறப்பால் வந்தது; ஆகவே பாவத்தில் இருந்து விடுதலை இறப்பால் வரவேண்டும். இதுவே விடுதலைக்கான தேவனுடைய திட்டம். *ரோமர் 6:7* மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.

மனிதன் சாத்தானுக்கு கீழ்ப்படிந்து, பாவத்தின் ஆளுகைக்குட்பட்டு சரீரத்தை பாவ செயல்களை செய்யும்படியாக தூண்டக்கூடாது. இதற்காக தேவன் செய்தது " **மனுக்குலத்தை இயேசுவோடு கூட சிலுவையில் அறைந்து கொல்வது".**
*ரோமர் 6:3 கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?*
*2 கொரி 5:14 கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்;*

உதாரணத்துக்கு ஒரு குடிகாரனை எடுத்துக்கொள்வோம். அந்த குடிகாரன் மரித்துப்போனால், மதுவுக்கு அவன் மேல் ஆதிக்கம் செலுத்த முடியாது.
**இயேசு நமக்காக மரித்தார்**. *ரோமர் 5:8 நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.*
**நமது பழைய மனிதன் அவரோடு கூட சிலுவையில் அறையப்பட்டான்**. *ரோமர் 6:6 நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்.*
**நாம் இயேசுவோடு கூட மரித்தோம்**. *ரோமர் 6:8 ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம்மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்.*
நாம் மரித்ததோடு காரியம் முடியவில்லை

*(ரோமர் 6:8 ), ரோமர் 6:4 மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். 5. ஆதலால் அவருடைய*

*மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.*

நம் பழைய மனிதனை சிலுவையில் கொன்றதன் மூலம் தேவன் பாவம் என்னும் பிரச்சினைக்கு தீர்வு கண்டார். சிலுவையின் மூலமாக பழைய மனிதன் அழிக்கப்பட்டான்.

**பிந்தின ஆதாம், இரண்டாம் மனிதன்**

பின் தேவன் ஒரு புது மனுக்குலத்தை உருவாக்கினார். ஆதாமிய வம்சத்தை ஒழித்து ஒரு புது வம்சத்தை தேவன் உருவாக்கினார்.

*1 கொரி 15:45 அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். 47. முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர்.*

இவ்வசனங்களில் இயேசுகிறிஸ்துவுக்கு **"பிந்தின ஆதாம்"** **"இரண்டாம் மனுஷன்"** என்று இரண்டு பட்டப் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. **பிந்தின ஆதாமாக**, தேவன் மொத்த மனுக்குலத்தின் தன்னுள் கொண்டவராக இருக்கிறார். **இரண்டாம் மனுஷனாக** ஒரு புது வம்சத்தின் தலைவராக இருக்கிறார். இப்படியாக தேவன் இயேசுவின் சிலுவை மூலமாக பழைய மனுஷனை ஒழித்து பாவம் என்னும் பிரச்சினையை தீர்த்தார்.

இன்று பல அருமையான விசுவாசிகளும் பாவம், **பாவங்கள்**, **பாவப்பிரமாணம்** - என்னும் மூன்று பிரச்சினைகளோடு போராடிக்கொண்டிருக்கிறார்கள். பாவத்தை மேற்கொள்ளுவது எப்படி? பாவம் செய்யாமல் இருப்பது எப்படி? பாவத்தில் விழாமல் இருப்பது எப்படி ? பாவத்தை நம் வாழ்க்கையில் தடுத்து நிறுத்துவது எப்படி? பாவங்களை அறிக்கை செய்து மீண்டும் அதை செய்யாமல் இருப்பது எப்படி? என்று தெரிந்து கொள்ள துடிக்கிறார்கள். இதற்காக பல போதனைகளை கேட்கிறார்கள். ஆனால் - தேவன் இயேசுவின் சிலுவை யின் மூலமாக "பாவம்" என்ற பிரச்சினையையும், இயேசுவின் இரத்தம் மூலமாக "பாவங்கள்" என்ற பிரச்சினையையும், பரிசுத்த ஆவியானவர் மூலமாக "பாவப்பிரமாணம்" என்ற பிரச்சினையையும் "ஏற்கனவே தீர்த்திருக்கிறார்" - என்று அறியாதவர்களாக இருக்கிறார்கள்.

பாவம் செய்ய தூண்டும் சக்தியாகிய "பாவத்தை", அந்த சக்திக்கு கீழ்ப்படியும் பழைய மனிதனை சிலுவையில் இயேசுவோடு அறைந்ததன் மூலமாக, செயல் இழந்து போகும்படியாக தேவன் செய்தார். *ரோமர் 6:6 நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். 7. மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.*

பாவத்துக்கு கீழ்ப்படிந்து மனிதன் செய்த "பாவங்கள்" என்ற பிரச்சினைக்காக, பாவங்களுக்கான பாவநிவாரண பலி செலுத்தி, தேவன் தீர்வு கண்டார். *1 யோவான் 2:2 நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்.*

எஞ்சி இருக்கும் "பாவப்பிரமாணம்" - *ரோமர் 7:21-23* - ( பழைய மனிதன் விட்டு சென்ற பழக்க வழக்கங்கள்) என்னும் பிரச்சினையை, தேவன் தன் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையிலால் தீர்த்தார். ***ரோமர் 8:2*** *கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. (* **குறிப்பு**: இக்காரியங்களைப்பற்றி மேலும் அறிந்து கொள்ள விரும்பினால் " மனுக்குலத்தின் மூன்று முக்கிய பிரச்சினைகளும் அவற்றுக்கு தேவனுடைய தீர்வும்" என்ற எமது வேத பாடத்தை படிக்கவும்)

## 3. சிலுவை மரணம் என்பது தாழ்த்துவதன், கீழ்ப்படிதலின் உச்சகட்டம்

*பிலி 2: 6-8. பிலி 2:8 அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.*

இயேசுவின் காலத்தில், சிலுவை மரணம் என்பது, மிகவும் கொடூரமானதும், அருவருக்கத்தக்கதும், வெறுக்கத்தக்கதுமாக இருநதது. அதுதான் ஒரு குற்றவாளிக்கு கொடுக்கப்படக்கூடிய உச்சகட்ட தண்டனை. அது ரோம குடிமகனுக்கு அனுமதிக்கப்படாதது. வழக்கமாக அது, தப்பி ஓடும் அடிமைகளுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும், கொலையாளிகளுக்கும், துரோகிகளுக்கும், பகைவர்களுக்கும், மிகவும் கொடூர குற்றங்கள் புரிந்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டது. இது கான்ஸ்டண்டைன் சக்கரவர்த்தியால் ஒழிக்கப்பட்டது.

இயேசு மனிதனான போது, அவர் தன்னைத்தானே "**வெறுமையாக்கினார்**" *( பிலி 2:7 ).* அதாவது தனது மகிமையின் சின்னங்களை களைந்தார். இப்போது மனிதனான பிறகு தன்னைத்தானே "**தாழ்த்தினார்**". அவர் மனித ரூபம் எடுத்த தேவனாக இருந்தும், தேவனுக்குரிய கவுரவத்தையோ அல்லது மேன்மையையோ தான் எடுத்தாளவில்லை. ஒரு கீழ்ப்படிந்த நிலைமைக்கு தன்னை ஒப்புக்கொடுத்தார். இயேசு கிறிஸ்து நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்படிந்தது சுயமான கீழ்ப்படிதல். அவர் குற்றமற்றவர். அவரது கீழ்ப்படிதலின் உச்ச கட்டம் சிலுவை மரணம் அளவுக்கு கீழ்ப்படிந்தது.

பாவத்தின் சம்பளம் மரணம். இயேசு கிறிஸ்து மிகவும் தரம் தாழ்ந்த மரணத்துக்கு தன்னை ஒப்புக்கொடுத்தது, நியாயப்பிரமாணத்துக்கு முழுமையாக தான் கீழ்ப்படிந்ததை காண்பிக்கிறது. இதை இயேசு செய்தது, " **எந்த விதமான பாவமும் மன்னிக்கப்பட முடியாமல் இருந்து விடக்கூடாது** " என்பதற்காக.

***எபி 4:15*** *நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.*

பவுல் அப்போஸ்தலர், விசுவாசிகளாகிய நாம் எப்படிப்பட்ட மனப்பாங்கு உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு உதாரணமாக இயேசு கிறிஸ்துவை காண்பிக்கிறார்.

*பிலி 2: 3 ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.*
*4. அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.*

தேவனுடைய ராஜ்யத்தில் உயர்வு வருவது கீழ்ப்படிதல், தாழ்த்துதல், மற்றவர்களுக்கு ஊழியம் செய்தல் மூலமாகவே என்பதை, இயேசுவின் கீழ்ப்படிதல், தாழ்த்துதல் ஆகியவற்றில் இருந்து நாம் நன்றாக அறிந்து கொள்ளலாம். பரலோக ராஜ்யத்தில் மேன்மை எப்படி வருகிறது என்பதற்கு இயேசு கிறிஸ்து ஒரு நல்ல உதாரணம். இந்த மனப்பாங்கே விசுவாசிகளிடம் இருக்க வேண்டும் என்று பவுல் விரும்புகிறார்

***பிலி 2:5*** *கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;*

### 4. கையெழுத்து கட்டளைகளை சிலுவையில் ஆணியடித்தது

***கொலோ 2:14*** *நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து;*

பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணமானது நக்கு எதிரிடையாகவும் விரோதமாகவும் இருந்தது.

**நியாயப்பிரமாணம், நமக்கு பாவத்தை காட்டும்படியாக (இரட்சகரை காட்டும்படியாக அல்ல ) கொடுக்கப்பட்டது**.

*ரோமர் 3:19 மேலும், வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும், நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம்.*

**நியாயப்பிரமாணம் மரணத்துக்கேதுவானது** *2 கொரி 3:7 எழுத்துகளினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டானபடியால், இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக்கூடாதிருந்தார்களே.*

**நியாயப்பிரமாணம் பாவத்துக்கு பெலன் கொடுத்தது** *( 1 கொரி 15:56; ரோமர் 7:11,13,14 ).* *1 கொரி 15:56 மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்.*

### நியாயப்பிரமாணத்தை சிலுவையில் ஆணியடித்தல்

மோசேயின் மதசம்பிரதாயங்களுக்கும், சடங்காச்சாரங்களுக்கும், இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப் பட்டபோது அவருக்கு என்ன சம்பவித்ததோ அதேதான் அவைகளுக்கும் சம்பவித்தது. பண்டைக் காலங்களில் ஒரு கடன்பத்திரமோ, அல்லது உரிமைப்பத்திரமோ முடிவுக்கு வரும்போது அது ஒரு கம்பத்தில் ஒரு ஆணி மூலமாக அறையப்பட்டு அது நீக்கப்பட்டதாக அறிவிக்கப்படும். இங்கே இயேசு கிறிஸ்து நியாயப் பிரமாணத்தை எடுத்து அதை சிலுவையில் அறைகிறார் என்றால், அது முழுவதுமாக **நீக்கப்பட்டது** என்பது பொருள். அதாவது நியாயப்பிரமாண கடன் பத்திரத்தின் மேல் "**முழுவதுமாக கொடுத்து தீர்க்கப்பட்டது**" என்று எழுதி இயேசு அதை நீக்குவது போன்று. இங்கே இயேசு நியாயப்பிரமாணத்தை குலைத்து போடுகிறார். அதாவது ஒரு பேப்பரில் மையால் எழுதி இருப்பதை துடைத்துவிடுவது போன்று. மனிதனுடைய நியாயப்பிரமாண மீறுதல்கள் குலைத்துப்போடப்படுவது மட்டுமின்றி, நியாயப்பிரமாணமே குலைத்துப்போடப்பட்டது.

மறுபடியும் பிறந்த, இரட்சிக்கப்பட்ட, ஒரு புதிய ஏற்பாட்டு விசுவாசி நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டவர் அல்ல *( 1 கொரி 9:21; ரோமர் 3:19; 6:14 ).* நியாயப்பிரமாணம் முழுவதுமாக "**ஒழிக்கப்படவில்லை**". அது இயேசுவை விசுவாசிப்பவர்களுக்கு மாத்திரம் நீக்கப்பட்டது. இயேசுவை விசுவாசியாதவர்கள் இன்னும் நியாயப்பிரமாணத்துக்கும் அதன் தண்டனைக்கும் அடிமைகளே *( யோவான் 3:36 ).*

## 5. தனது "சிலுவை மரணத்தின்" மூலம் இயேசு கீழ்காணும் காரியங்கள் அனைத்தையும் நிறைவேற்றினார்

**1. சாத்தானின் தோல்வி** *( யோவான் 12: 31 -32; கொலோ 2:14-17 ).*
***எபி 2: 14*** *ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், 15 ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.*

**2. மரணத்தின் ஆதிக்கம் நீக்கப்படுதல்** *( ரோமர் 5:12-21; 6:9; 8:2; 1 கொரி 15:1-58; 2 கொரி 3:6-15; எபி 2:14-15 )*
***ரோமர் 5:17*** *அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிகநிச்சயமாமே.*

**3. மரணம் வரை தாழ்த்தி கீழ்ப்படிதலுககும் அன்புக்கும் உதாரணம்** *( பிலி 2:8; எபி 5:8-10; 1 பேதுரு 4:1 )*
***1 பேதுரு 2:21*** *இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.*

**4. இயேசு பூரணப்படுத்தப்படுதல்** *( எபி 5:8-11 )*
***எபி 2:10*** *ஏனென்றால் தமக்காகவும் தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது.*

**5. அனைத்து பாவங்களில் இருந்தும் இரட்சிப்பு** *( மத் 26:28: எபே 1:7; எபி 9:15; வெளி 1:5; 5:9-10 )*
***கொலோ 1:14*** *(குமாரனாகிய (அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.*

**6. எல்லோருக்குமான மரண தண்டனை** *( 2 கொரி 5:14-21; 1 கொரி 6:19-20; எபி 2:9-15; 1 பேதுரு 1:19 )*
***ரோமர் 5: 6*** *அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். . 7. நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். 8 நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்*

**7. சாத்தானுடைய பிடியில் இருந்தும் பாவத்தில் இருந்தும் விடுதலை**
*( 1 கொரி 6:19-20; ரோமர் 8:18-24; 14:7-9; 2 கொரி 5:14-15 )*
***1 பேதுரு 1:19*** *குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.*

**8. தேவனுடைய முழு நீதியும் திருப்தியாக்கப்படுதல்** *( ஆதி 2:17; ரோமர் 3:21 – 22; யோவான் 3:16 )*
***ரோமர் 5:10*** *நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.*

**9. அனைவருக்கும் முழு சரீர சுகம்** *( மத் 8:17; 13:15; 1 பேதுரு 2:24; யோவான் 10:10; யாக் 5:14-16 )*
***ஏசாயா 53: 4*** *மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். 5. நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.*

**10. பரிசுத்த ஆவியானவரின் முழு அபிஷேகம்** *( கலா 3:13-14; யோவான் 7:37-39; லூக்கா 24:49; அப் 1:4-8, 33 )*
***கலா 3:14*** *ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று.*

**11. அனைவரும் ஐசுவரியவான்களாக இருக்க வழி.**
***2 கொரி 8:9*** *நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே.*

இயேசு சிலுவையில் மரித்ததற்கான காரணங்களை பார்த்தோம். நம்முடைய வாழ்க்கையில் என்ன என்ன சம்பவிக்க வேண்டும் என்பதற்காக இயேசு சிலுவையில் மரித்தார் என்று படித்தோம். இயேசு சிலுவையில் மரித்ததால் நமக்கு என்ன என்ன கிடைத்திருக்கிறது என்று படித்தோம். இயேசு சிலுவையில் உபத்திரவப்பட்டு மரித்ததன் நோக்கங்களை பார்த்தோம்.

**இவைகளை எல்லாம் நாம் அறிந்திருக்கிறோமா? இந்த நோக்கங்கள் நம் வாழ்க்கையில் நிறைவேறி இருக்கின்றனவா? இயேசு சிலுவையில் "பேசியவற்றை" மட்டும் அறிந்து, தியானித்து, அவர் சிலுவையில் "செய்தவற்றை" அறியாமல் தியானிக்காமல் வாழுவதனால், இயேசுவின் சிலுவை மரணத்துக்கு பயன் என்ன?**

இப்போது, இந்த சத்தியத்தை படித்து, தியானித்து, அறிந்தவர்களாக "மீட்கப்பட்டவர்களாக" வாழுவோம். நம் மீட்புக்காக சிலுவையில் மரித்து, உயிர்த்தெழுந்து, என்றும் வாழும் இயேசு கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழுவோம். என்ன நோக்கங்களுக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தாரோ, அந்த நோக்கங்களை நன்கு அறிந்து அந்த நோக்கங்கள் நம்முடைய வாழ்க்கையில் நிறைவேறும்படியாக நம்மை ஒப்புக்கொடுத்து வாழுவோம். இயேசு கிறிஸ்து **"சிலுவையில் பேசின வார்த்தைகளுக்கு"** முக்கியத்துவம் கொடுத்து அவற்றை தியானிப்பது போல, இயேசு கிறிஸ்து **"சிலுவையின் மூலம் செய்தவைகளுக்கும்"** முக்கியத்துவம் கொடுத்து வாழுவோம். அப்போதுதான் தேவனுடைய சித்தம் இந்த பூமியில் முழுவதுமாக செயல்படுத்தப்பட முடியும்.

நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆசீர்வாதிக்கிறவர்களாக, ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக வாழுங்கள்

**ஆமென்.**

**Bro D.Vergin Kumar.**

If you need any clarifications kindly contact me in deeveekumar@yahoo.com
**Resources;** Dakes bible commentary, Andrew Wommack bible commentary, Wuest's bible commentary, Vine's expository Dictionary of Bible words, Strong's Bible concordance, Vine's expository dictionary of the New Testament, The Spiritual man – By Watchman nee, The Normal Christian life – by Watchman nee. Vincent's New Testament Word Studies, International Standard Bible encyclopedias. Etc. All Bible quotes are from King James Version bible, unless quoted otherwise. In Tamil Bible some verses may by above or below than the quoted verse.

-----------------------------------